**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.105/2018**

2026—ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.2 சக்திவேல், வயது 33 , த/பெ வெங்கடேசன்

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)**

நான் எப்போது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 அல்லது 3 வாய்தாக்களுக்கு முன்னர் தாக்கல் செய்தேன். அதன் பின்னர் வரும் வாய்தா தேதிகளை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் வாய்தா தேதி தெரியாது, இன்றுதான் தெரிய வந்ததால் வந்துள்ளேன். இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்க ஏதேனும் சாட்சி அழைப்பாணை பெற்று வந்தேனா என்றால் ஆம் சாட்சி அழைப்பாணையை செந்தில் என்பவர் மூலம் தொலைபேசியில் பெற்றுதான் வந்துள்ளேன்.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நானே தெரிவித்தேனா அல்லது செந்தில்குமார் என்பவர் கூறி பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்யப்பட்டதா என்றால் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. செந்தில்குமாரை எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் என்னுடைய 10 வயது காலத்திலிருந்து அவர் எனக்கு பழக்கம். செந்தில்குமாருக்கு என்ன வயது என்றால் 40 வயதாகிறது. எனக்கு 33 வயதாகிறது. நாங்கள் இருவரும் ஒரே தெருவில்தான் வசித்து வருகிறோமா என்றால் ஆம். 10 வீடுகள் தள்ளி வசித்து வருகிறோம்.

3. அண்ணாமலை யார் என்றால் செந்தில்குமாரின் தந்தை ஆவார். அண்ணாமலை வயது என்ன என்றால் 60 வயதிருக்கும். செந்தில்குமாரும், அண்ணாமலையும் ஒரே வீட்டில் வசித்து வருகிறார்களா என்றால் இல்லை, தனித் தனியாக பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். அண்ணாமலைக்கும், செந்தில்குமாருக்கும் பேச்சு வார்த்தை உள்ளதா என்றால் முன்னர் பேசிக் கொண்டிருந்தார்கள், தற்போது ஒரு வருட காலமாக பேசி கொள்ளவில்லை. கடந்த 1 வருடத்தில் அவர்களுக்குள் என்ன பிரச்சினை என்றால் ஏர் ஓட்டுவதில் நிலப்பிரச்சினை, ஏர் ஓட்டும் நிலம் யாருடையது என்றால் செந்தில்குமார் நிலமாகும்.

4. நான் ஏர் ஓட்டுவதில் ஏதேனும் பிரச்சினை வந்ததா என்றால் இல்லை. செந்தில் என்னிடம் என்ன பிரச்சினை என்ற விவரத்தை சொன்னாரா என்றால் இல்லை. என்னை எதற்காக சாட்சி சொல்ல அழைத்தார்கள் என்றால் ஏர் ஓட்டுவதில் பிரச்சினை வரும் என்பதால் ஏர் ஓட்ட வேண்டாம் என்று 2ம் பிரதிவாதி ராணி என்னிடம் சொல்லியதால் சாட்சி அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கை யார், எப்போது தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. தகராறு செய்யும் நிலத்தின் சர்வே எண், அளவுகள், அந்த நிலம் யாருடையது, யார் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. நான் அந்த நிலத்தின் பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இந்த சொத்தின் ஜக்பந்திகள் விவரம் தெரியுமா என்றால் வடக்கில் கார்த்தி மனையும், கிழக்கில் முனுசாமி நிலமும், மேற்கில் பிச்சாண்டி நிலமும், தெற்கில் ஏரியும் உள்ளது. அந்த சொத்தின் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 6 ஏக்கர் ஆகும். நிலத்தில் ஏர் ஓட்டும் போது எவ்வளவு கூலி என்றால் 1 மணி நேரத்திற்கு 1200 ரூபாய் ஆகும். எத்தனை வருடமாக நான் ஏர் ஓட்டுகிறேன் என்றால் 8 வருடமாக ஓட்டுகிறேன். அதில் 1 வருடத்திற்கு 2 முறை ஏர் ஓட்டுவேன்.

6. செந்தில்குமார் என்பவருக்கு சுயமாக ஏதேனும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. செந்தில்குமாருக்கு அவர் தந்தை சொத்து ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் எழுதி வைத்துள்ளார், அவர் தந்தைக்கு ஆறு ஏக்கர் நிலம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும், ஆனால் செந்தில்குமாருக்கு எவ்வளவு நிலம் எழுதி வைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. செந்தில்குமாருக்கு எழுதி வைத்த நிலத்தில்தான் நான் ஏர் ஓட்டி வருகிறேன் என்றால் சரிதான். மீதமுள்ள சொத்துக்கள் யார் யாரிடம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் செந்தில்குமார் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்து பிரச்சினைக் காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. இவ்வழக்கை பற்றி எனக்கு எந்த விவரம் தெரியாது என்றாலும், செந்தில்குமார் என் நண்பர் என்ற முறையில் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அந்த நிலத்தில் ஏர் ஓட்டியதற்கான ஆதாரமாக ஏதேனும் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிவடைந்தது.  மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
Arni